(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஓர் ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடியாங்குப்பம், சிவனார்தாங்கல் ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்து ஒரு ஊராட்சியாக ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 66, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

66—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

***6525—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் பேரூராட்சி, வெண்ணமடையில் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2004 ஜூலை 29]

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றாலம் பஞ்சாயத்து வெண்ணமடையில் மிகவும் கஷ்ட நிலையில் சுமார் 20 ஆண்டுகாலமாக பட்டா இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பகுதி மக்களின் ஏழ்மையைக் கருதி, ஏழைகளுக்கு உதவிடும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்காசி வட்டம், இலஞ்சி கிராமம், புல எண் 1170, 1171 கீழவெண்ணமடை குளமாகும். மேற்படி குளம் புறம்போக்கில் 33 நபர்கள் வீடுகட்டி ஆக்கிரமணம் செய்துள்ளனர். இவர்கள் வீடு கட்டியுள்ள நிலம் நீர்நிலைப் புறம்போக்கு நிலம் என்பதாலும், இந்த நிலம் தடையாணைக்கு உட்பட்ட நிலம் ஆகையாலும், மேற்படி நபர்கள் ஆக்கிரமித்துள்ள இடம் தடை செய்யப்பட்ட நிலம் என்பதாலும் இவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாநகராட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதி, பேரூராட்சிப் பகுதி, ஊராட்சிப் பகுதிகளில் அரசின் பல்வேறு புறம்போக்கு இடங்களில் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அதில் பெரும்பாலான இடங்கள் பொதுமக்களுக்கு இடையூறு இன்றியும், அரசுக்குப் பயன்படாத நிலையிலும் உள்ளன. ஆகவே தற்சமயம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடங்களை, காலி இடங்களைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருவதுபோல், தமிழகத்திலுள்ள பயனற்றுக் கிடக்கும் புறம்போக்கு நிலங்களில் ஏரி, குளங்கள் போக ஏழையெளியவர்கள் வீடுகட்டி வசித்து வரும் இடங்களை, அந்த இடத்திற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்து பட்டா வழங்கி அவர்களிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடத்திலே அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 67, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

67—

தடுப்பு அணை

***31456—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம், அமராவதி ஆற்றின் குறுக்கே சிறிய தடுப்பு அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அமராவதி ஆற்றில் தாராபுரத்திற்கு மேலே 9 அணைக்கட்டுகளும், கீழே 9 அணைக்கட்டுகளும் உள்ளன. இதில் தாராபுரம் நகராட்சிக்காக அமராவதி ஆற்றில் குடி தண்ணீர் எடுக்கும் இடத்திற்கு மேலே சுமார் 1/2 கிலோமீட்டர் தூரத்தில் கொழிஞ்சிவாடி அணை உள்ளது. இப்பகுதிக்குக் கீழே 6 கிலோமீட்டர் தூரத்தில் நஞ்சைத்தலையூர் அணைக்கட்டு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே குறுகிய தூரத்தில் இன்னுமொரு Check dam கட்ட வேண்டுமானால், அதன் பயன்பாடு மற்றும் பயன் செலவு விகிதம் ஆகியவற்றை ஆராய்ந்த பின்பு இதைப்பற்றி அரசு கனிவுடன் முடிவெடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.